# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் 35

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**


தென்னிந்திய நல உரிமைச் சங்க தலைவர்கள் நடுவில் சர்.பிட்டி.தியாகராயர்

# நாம் திராவிடர்!

இடஒதுக்கீட்டின் வரலாற்றுத் தேவையையும் பயன்களையும் நோக்கங்களையும், ஆரம்பக் கட்டத்திலேயே சரியாகப் புரிந்துகொண்ட மாநிலம் தமிழ்நாடு. எனவேதான், இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் முன்னோடி மாநிலமாக இன்றுவரை தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. அப்படி எதைத் தமிழ்நாடு சரியாகச் செய்தது? எங்கிருந்து சமூகநீதியை நிலைநாட்டும் இடஒதுக்கீட்டுப் போராட்ட வரலாற்றைப் புரிந்து கொள்வது?

கிழக்கிந்தியக் கம்பெனி 1639-இல் மதராசப் பட்டினத்தை விலைக்கு வாங்கியதில் இருந்து புரிந்துகொள்ளத் தொடங்குவோம். மெல்ல மெல்ல தமிழ்நாட்டையும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் கைப்பற்றத் தொடங்கிய ஆங்கிலேயர்கள் **'மெட்ராஸ் மாகாணம்'** என்ற பெயரில் நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கினர். நிர்வாகக் கட்டமைப்பை நிர்வகிக்கத் தேவையான அறிவுஜீவிகளை உருவாக்க, மெட்ராஸ் கிறித்துவக் கல்லூரி (1837), மாநிலக் கல்லூரி (1840) என்று கல்லூரிகள் வரிசையாகத் தொடங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, 1857-இல் மெட்ராஸ் பல்கலைக் கழகம் செயல்படத் துவங்கியது.

ஆங்கிலேயர்கள் தொடங்கிய கல்லூரிகளிலும், அரசு நிர்வாகத்திலும் உயர்ஜாதியினர் மட்டுமே, குறிப்பாக பிராமணர்கள் மட்டுமே இடம் பிடித்தனர். உதாரணமாக, 1892 முதல் 1904 வரை நடைபெற்ற சென்னை மாகாண சிவில் சர்வீஸ் தேர்வுகளில் வெற்றிபெற்ற 16 பேர்களில் 15 பேர் பார்ப்பனர்கள். எங்கும் எதிலும் பிராமணர் என்ற நிலையை மெட்ராஸ் மாகாண பார்ப்பனரல்லாத மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். பார்ப்பனரல்லாத மக்களுக்குக் கல்வியிலும், ஆட்சி நிர்வாகத்திலும் உரிய பங்கு வேண்டும் என்ற நோக்கத்தை முன்வைத்து, புதிய தலைவர்களும், அமைப்புகளும் உருவாகின. அதே காலகட்டத்தில் ஆங்கில ஆட்சிக்கு எதிரான மனநிலையும் உருவாகி, இந்தியாவில் வளர்ந்து வந்தது. ஆட்சி நிர்வாகத்தில் இந்தியர்களுக்குப் பங்கு வேண்டும், என்ற உணர்வு நிலை ஏற்பட்டிருந்தது.

1909-ஆம் ஆண்டு, செயலுக்கு வந்த மிண்டோ-மார்லி சீர்திருத்தத்தின் மூலம் இந்தியச் சட்டமன்றங்களுக்கு இந்திய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் முறை, முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி சென்னை மாகாண சட்டமன்றத்திற்கு 19 உறுப்பினர்களைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்க முடியும். நிலவுடைமையாளர்கள், வரிசெலுத்துவோர், வணிகர்கள் உள்ளிட்ட சிலர் மட்டுமே வாக்குச் செலுத்தும் உரிமையைப் பெற்றிருந்தனர். பெண்களுக்குத் தேர்தலில் பங்கேற்கும் உரிமையும், வாக்கு செலுத்தும் உரிமையும் இல்லை.

ஒதுக்கப்பட்ட 19 இடங்களில் பெரும்பான்மையான இடங்களை பார்ப்பனர்களே கைப்பற்றி வந்தனர். அதாவது முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்பட்ட தனித்தொகுதிகளில் முஸ்லிம் வேட்பாளர்கள் மட்டுமே நின்று வெற்றிபெற்றனர். முஸ்லிம் அல்லாத இந்துக்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் பார்ப்பனர்களே தொடர்ந்து வெற்றி பெற்றனர். அவ்விடங்களில் பார்ப்பனரல்லாதவர்கள் பெருமளவில் வெற்றிபெற இயலவில்லை. மாகாண கவர்னர் ஜெனரலும் தன் அதிகாரத்திற்கு உட்பட்டு சட்டமன்றத்திற்கு உறுப்பினர்களை நியமிக்க முடியும். அவ்வகையான நியமன இடங்களையும் பார்ப்பனர்களே பெற்று வந்தனர். இத்தனைத் தடைகளைக் கடந்து, சர். பிட்டி. தியாகராயர், டாக்டர் டி.எம்.நாயர் உள்ளிட்ட மிகச்சில பார்ப்பனரல்லாத தலைவர்களே, சென்னை சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.


சர்.பிட்டி.தியாகராயர்


டி.எம்.நாயர்

சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினர்கள் இணைந்து, வாக்களித்து தமது பிரதிநிதியாக ஒருவரைத் தேர்ந்தெடுத்து, டெல்லி கவர்னர் ஜெனரல் கவுன்சிலுக்கு 'அனுப்பி வைக்கும் உரிமையும் மிண்டோ-மார்லி சீர்திருத்தத்தினால் கிடைத்தது. இம்முறையிலும் 1916-வரை ஒரு பார்ப்பனரல்லாதார் கூட சென்னை மாகாணத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படவில்லை. 1915-இல் டாக்டர் டி.எம்.நாயர் டெல்லி கவுன்சிலுக்கு வேட்பாளராகப் போட்டியிட்டாலும், பார்ப்பனர்கள் அனைவரும் இணைந்து அவரைத் தோற்கடித்தனர். அப்போது டி.எம்.நாயர் காங்கிரஸ் கட்சியில் இருந்தார். இருப்பினும், காங்கிரசில் நிரம்பி வழிந்த பார்ப்பனர்கள் அவரைத் தோற்கடித்தனர்.

1909-இல் செயலுக்கு வந்த மிண்டோ-மார்லி சீர்திருத்தத்தின் மூலம் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட தனித்தொகுதி முறை வகுப்புரிமைப் போரில் முக்கியமான முன்னேற்றம் என்றாலும், அச்சீர்திருத்தம் தென்னிந்திய மக்களுக்கு நன்மை விளைவிக்கவில்லை என்ற விமர்சனப் பார்வை தென்னிந்திய பார்ப்பனரல்லாத தலைவர்களிடம் இருந்தது. வடஇந்திய உயர்சாதி இந்துக்களின் ஆதிக்கத்தின் காரணமாக, முஸ்லிம்கள் தங்களுக்கென முஸ்லிம்லீக் என்ற அரசியல் கட்சியை அமைத்துக்கொண்டு, அதன்மூலம் அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொண்டதைக் கண்ட தென்னிந்தியப் பார்ப்பனரல்லாதாரும் தம் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு, சென்னை மாகாண பார்ப்பனரல்லாத தலைவர்களிடம் மேலோங்கியது.

**இதன் முழு உரிமையும் நமக்குத்தான் உண்டு. அதை அடைய வேண்டுமெனில், நாம் திராவிடர் என்ற இன உணர்ச்சியைப் பெற வேண்டும் என்று மிகத் தெளிவாக நீதிக்கட்சித் தலைவர்கள் சிந்தித்தனர்.**

நாடெங்கும் நாம். ஆனால், நாட்டை ஆள சட்டமியற்றும் சட்டமன்றங்களிலும், கல்விக்கூடங்களிலும், அரசு நிர்வாகப் பதவிகளிலும் நம்முடைய பிரதிநிதிகள் இல்லை என்ற உண்மையைப் புரிந்துகொண்டோரின் எண்ணிக்கை பெருகியது. எனவே, பார்ப்பனரல்லாத மக்களுக்குரிய இடங்களைப் பெறும்வகையில் சட்டங்கள் ஏற்படவேண்டும், அவ்வாறு சட்டங்களை இயற்றும்படி அரசை வலியுறுத்தவும், மக்கள் மத்தியில் உணர்வெழுச்சியை ஏற்படுத்தவும் அமைப்பு தேவை. பார்ப்பன ஆதிக்கத்திலிருந்து பார்ப்பனரல்லாத மக்களை மீட்டெடுக்க, ஓர் அமைப்பு தேவை. அதற்கான விதை 1916-ஆம் ஆண்டு நவம்பர் 20 அன்று சென்னை வேப்பேரியில் உள்ள எத்திராஜ் முதலியார் எனும் வழக்கறிஞர் இல்லத்தில், நீதிக்கட்சி எனும் சிறுசெடியாகத் தோன்றியது.

அக்கூட்டத்தில், சர்.பிட்டி. தியாகராய செட்டியார், டாக்டர் டி.எம்.நாயர், நடேச முதலியார், ராமராய நிங்கார், எம்.சி.ராஜா, முத்தையா முதலியார், அலமேலு மங்கை தாயாரம்மாள், டாக்டர் உஸ்மான் சாகிப் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இத்தலைவர்கள் கலந்துகொண்ட அக்கூட்டத்தில் உருவான நீதிக்கட்சி எனும் செடியே தமிழ்நாட்டில் சமூகநீதி மரமாக வளர்ந்தது.

## நீதிக்கட்சியை இயக்கிய மைய நரம்பு?

பார்ப்பனரல்லாதார் எவ்வகையிலும் தாழ்ந்தவர்கள் அல்ல, 'சூத்திரர்' என்றும், தாழ்ந்த ஜாதியார் என்றும் அவமதிக்கப்படுவதை உடனடியாக நிறுத்தவேண்டும். எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்திருக்கும் பார்ப்பனர் ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டும் என்ற நோக்கங்களைப் பார்ப்பனரல்லாத மக்கள் நெஞ்சில் ஆழப் பதியத் தேவையான உணர்ச்சி என்ன? இந்தப் புள்ளியில் வட இந்தியாவில் இருந்து வேறுபட்டு, நாம் ஆரியரல்லர் என்ற ஒற்றைப் புள்ளியில் பார்ப்பனரல்லாத தலைவர்கள் ஒன்றுபட்டு, ஆரிய மேன்மையை எதிர்க்கத் துணிந்தனர்.

ஆரிய மேன்மையை ஒழிக்கவேண்டுமெனில், பார்ப்பனரல்லாதாரிடையே 'நாம் திராவிடர்' என்ற உணர்ச்சியை உருவாக்குவது அவசியம் என்றும், நீதிக்கட்சியின் தொடக்கக் காலத் தலைவர்கள் கருதினர். நாம் பிராமணர்கள் என்ற உணர்ச்சி, பிராமணர்களுக்கு இருப்பதைப் போன்று, நாம் பிராமணரல்லாதார் என்ற உணர்ச்சி நமக்கு வேண்டும் என்ற கொள்கைத் தெளிவை, நீதிக்கட்சியின் தொடக்கக் காலத் தலைவர்கள் பெற்றனர்.

இது பார்ப்பனரல்லாதாருக்குச் சொந்தமான நாடு. இங்கு நமக்குச் சொந்தமான அரசு அமையவேண்டும். இதன் முழு உரிமையும் நமக்குத்தான் உண்டு. அதை அடைய வேண்டுமெனில், நாம் திராவிடர் என்ற இன உணர்ச்சியைப் பெற வேண்டும் என்று மிகத் தெளிவாக நீதிக்கட்சித் தலைவர்கள் சிந்தித்தனர். நாம் திராவிடர் என்ற உணர்வே சமூகநீதிக் கொள்கையைத் தமிழ்நாட்டு மக்கள் மனங்களில் ஆழப் பதிந்தது.

...குரல் ஒலிக்கும்

## 'மோடி மஸ்தான்' வேலைகள்!

'திராவிடமாடல்' அரசின் துணை முதலமைச்சர், ஒரு விழாவில் பேசுகையில், "தொகுதிக்கு ஒரு நூலகம் தலைவர் கலைஞர் பெயரால், தி.மு.க இளைஞர் அணி அமைக்கின்றது. இதுவரை 75 நூலகங்களைத் திறந்துவிட்டோம். மீதி 159 நூலகங்களை இன்னும் ஆறே மாதத்தில் திறந்து விடுவோம்" எனப் பெருமை பொங்க அறிவிக்கின்றார். ஆனால், "மக்கள் விரோத ஆட்சியை, திராவிட மாடல் ஆட்சின்னு ஏமாத்துறீங்க" என்கிறார் ஒரு நடிகர்.

அந்த அரசியல் கட்சியின் கூட்டத்துக்கு வந்த ஒரு இளைஞன், தான் வேலையை உதறிவிட்டு, மாநாட்டுக்கு வந்ததாகப் பெருமை பொங்கச் சொல்கிறார். 250 கோடி சம்பளம் வாங்கிய நடிகர், தன் சினிமா வேலையை விட்டு விட்டு, அரசியலுக்கு வந்ததை முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு தானும் வந்ததாகச் சொல்கிறார். அவருக்கு மாதம் 10 ஆயிரம் ரூபாய் சம்பளத்துக்கும், 250 கோடி ரூபாய்க்கும் வித்தியாசம் தெரியவில்லை.

அரசியல் ஆர்வம் கொண்ட இளைஞர்களுக்கு இனமானப் பேராசிரியர் சொன்ன பதில் இது. "அரசியல் என்பது நம் ஆர்வம், சமூக ஆர்வம். சமூக ஆர்வம் மட்டும் இருக்கு எனக்கு. ஆனால், பொண்டாட்டி பிள்ளையை சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுத்துவேன் என்றோ அல்லது சமூக ஆர்வத்தினால் 'கிடைக்கும்' வருவாய் கொண்டு பொண்டாட்டி பிள்ளைக்கு சாப்பாடு கொடுப்பதோ தப்பு. 'எனக்கு, ஒரு திராட்சைத் தோட்டம் இருக்கு. நான் ஒரு விவசாயி'ன்னு சொல்லும் இந்த உலகில், நான் சைக்கிள் பஞ்சர் ஒட்டி தொழில் நடத்துறேன்"ன்னு சொல்லு. அதுதான் திமிர். அந்தத் திமிர்தான் வேணும் என்றார்.

2014-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மோடியை, பிரதமர் வேட்பாளராக அறிமுகப்படுத்திய போது, அவருடைய உழைப்பு, அர்ப்பணிப்பு, அனைவரையும் ஈர்க்கும் சக்தி, வளர்ச்சியின் நாயகன் என எல்லாமே கார்ப்பரேட்டுகளால் போலியாக மக்களின் மனதில் கட்டமைக்கப்பட்டவை. அதுதான் உண்மையான 'மோடி மஸ்தான் வேலை'. நேரடியாக எதிர்க்க முடியாதவர்கள் 'மோடி மஸ்தான் வேலையெல்லாம் வேண்டாம்' என்று கூறிவிட்டு இங்கு மோடி மஸ்தான் வேலை செய்யத் தொடங்கி இருக்கின்றனர்.

## ::ப்ளாஷ்பேக்


தி.பாலசுப்ரமணியன்



### தளபதியின் எழுச்சியுரை!

1986-ஆம் ஆண்டு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதியார் அவர்கள், இரவு 1:30 மணியளவில் கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடிக்கு வருகை தந்திருந்தார். அப்போது விருத்தாசலம் செல்வராஜ் கழக அமைப்புச் செயலாளர் ஆக இருந்தார். அந்த நேரத்திலும், தலைவர் தளபதி அவர்கள் எங்களிடையே எழுச்சியுரையாற்றி, எங்களையெல்லாம் உற்சாகப்படுத்தினார். அப்போது, நான் எடுத்துக்கொண்ட புகைப்படம்.

– தி.பாலசுப்ரமணியன், வட்ட துணைச் செயலாளர், திட்டக்குடி, கடலூர் மேற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### தொண்டர்கள் ஏற்க மாட்டார்கள்!

1976-ஆம் ஆண்டு, நெருக்கடி நிலையின்போது, மாநிலக் கட்சிகளைத் தடை செய்யப்போவதாக ஒரு தகவல் பரப்பப்பட்டது. அப்போது, கட்சிப் பெயரின் முன்னால், அனைத்திந்திய என சேர்த்துக்கொண்டால் கலைக்கமாட்டார்கள் என்றும் பேச்சு வந்தது. அதையடுத்து, சில கட்சிகள் தங்கள் பெயரை மாற்றிக் கொண்டபோது, தி.மு.கழகப் பெயரையும் மாற்றலாம். எனச் சிலர் கலைஞரிடம் கூறினர். ஆனால், இப்படியொரு சிந்தனை, கட்சியின் மேல் மட்டத்தில் இருப்பது தெரிந்தால்கூட, கழகத் தொண்டன் உயிரை மாய்த்துக் கொள்வான் எனக்கூறி, அந்த யோசனையை நிராகரித்தார் கலைஞர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

645

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.